# க.பொ.த. (சா. தர) உதவிக் கருத்தரங்கு - 2015

**தமிழ் மொழியும் இலக்கியமும் I, II**

மூன்று மணித்தியாலங்கள்

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

**கவனிக்க:**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **(1), (2), (3), (4)** என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

---

- **பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

**01.** அரண்மனை **உப்பரிகை**யில் சோழனும் அரசியும் அமர்ந்திருக்கின்றார்கள். இதில் 'உப்பரிகை' என்பதன் பொருள்
(1) மேல்மாடம் (2) அரியணை (3) அந்தப்புரம் (4) அரமியம்

**02.** '**முகரும்** எறும்புகளின் ஊர்வலம்' - இங்கு 'முகர்தல்' என்பதன் ஒத்த பதம்
(1) மணத்தல் (2) ஊருதல் (3) உண்ணுதல் (4) நகர்தல்

**03.** போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை **நிபுணராக** வைத்தியர் அருளம்பலம் கடமையாற்றினார். இதில் நிபுணன் என்பதன் எதிர்ப்பாற் சொல்
(1) நிபுணி (2) நிபுணிச்சி (3) நிபுணள் (4) நிபுணை

**04.** 'தமக்கென வாழாது **பிறர்**க்குரியாளராய் வாழ்வது சிறந்த பண்பு' - இதில் 'பிறர்' என்ற சொல்லின் எதிர்ப்பொருட் சொல்
(1) அவர் (2) சமர் (3) தமர் (4) பகைவர்

**05.** 'சந்தையில் பொருட்களை **மலிவாக** வாங்கினேன்.' - இங்கு 'மலிவு' என்பதன் எதிர்ப்பொருட்சொல்
(1) ஒறுப்பு (2) விருப்பு (3) இலாபம் (4) குறைவு

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

**06.** ஒரு பொருளைப் பற்றிக் கேட்போர் மகிழுமாறு உயர்த்திக் கூறும் அணி,
(1) தற்குறிப்பேற்றம் (2) சிலேடை (3) உருவகம் (4) உயர்வுநவிற்சி

**07.** வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, பசுமை என்பன
(1) ஐங்கணை (2) ஐந்திணை (3) ஐவகை நிறங்கள் (4) ஐவகை பரிசங்கள்

**08.** ஒருவர் இறந்த பின்னர் அவரின் உறவுப் பெண்கள் அவரை நினைத்துப் புலம்புதல்
(1) ஒத்திகை (2) ஒப்பாரி (3) ஓலக்கம் (4) ஒப்புரவு

**09.** பிரயாசப்படு, இடம், மான் என்ற சொற்களுக்கு நிகரான சொல்
(1) உலை (2) உளை (3) உழை (4) அழை

**10.** பல வடிவங்களிலான அல்மிரா (Almirah) க்கள் சந்தையில் கிடைக்கின்றன. அல்மிரா (Almirah) என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான கலைச்சொல்
(1) நிலைப்பேழை (2) நிலைக்கண்ணாடி (3) அலுமாரி (4) பீரோ

[ பக். 2 ஐப் பார்க்க.

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

**11.** அலகு - அழகு என்ற சொற்கள் குறிக்கும் பொருள் முறையே,
(1) கடல் - சிங்கம் (2) கூர்மை - சிறப்பு (3) கூர்மை - கடல் (4) சிறப்பு - சிங்கம்

**12.** அதி மிகுந்த அறிவுப் புலமையை வெளிப்படுத்தும் அருஞ்சொற்றொடர்
(1) நுண்மாண் நுழைபுலம் (2) அண்ட சராசரம் அனைத்தும்
(3) உணர்வொழி காலம் (4) சாதுரியமாகவும், மாதுரியமாகவும்

**13.** பின்வருவனவற்றுள் பிரான்சிய மொழிச் சொற்கள் கொண்ட தொகுதி
(1) துக்கம், சீலம், பிக்கு (2) பென்சில், மைனர், சினிமா
(3) பட்டாளம், துருப்பு, இலாந்தர் (4) முலாம், சுமார், சால்வை

**14.** சுருட்டு - கட்டு என்பது போல புத்தகம்
(1) தொகுதி (2) குவியல் (3) கூட்டம் (4) அடுக்கு

**15.** அசூயை என்ற வடமொழிச் சொல்லின் தமிழ் வடிவம்
(1) போட்டி (2) பொறாமை (3) மனக்குறை (4) செருக்கு

**16.** 'ஒருவன் தன் நிலையிலிருந்து தாழ்வானாயின் அற்பர்களும் அவமதிப்பர்' என்ற கருத்தைத் தரும் பழமொழி
(1) உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை
(2) கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா?
(3) சேற்றில் புதைந்த யானையை காகமும் கொத்தும்.
(4) காகம் திட்டி மாடு சாகாது.

**17.** 'இரக்கப் போனாலும் சிறக்கப் போ' என்ற பழமொழிக்குரிய பொருத்தமான கருத்து
(1) வறுமையிலும் செம்மை (2) பணத்தின் வலிமை
(3) கொடையின் சிறப்பு (4) தருமத்தின் உயர்வு

**18.** கணவனை இழந்த மனைவி கையறு நிலையை அடைந்தாள். இதில் கையறுதல் என்ற மரபுத் தொடரின் கருத்து
(1) நட்டமடைதல் (2) வருந்துதல்
(3) உதவியற்றிருத்தல் (4) திகைத்தல்

**19.** ஒத்தகருத்துள்ள சொற்களைக் கொண்ட இணைமொழி
(1) சீரும் சிறப்பும் (2) ஆதிஅந்தம்
(3) அல்லும் பகலும் (4) ஓட்டமும் நடையும்

**20.** 'புறக்குடத்து வார்த்த நீர் போல' என்ற உவமைத் தொடருக்குப் பொருத்தமானது
(1) காட்டில் எறித்த நிலாப்போல (2) காட்டாற்று வெள்ளம்போல
(3) கல்மேல் எழுத்துப்போல (4) சிறகற்ற பறவைபோல

**21.** அழுத குழந்தையை தாய் அன்போடு அணைத்து எடுத்தாள். இதில் பெயரெச்சமாக அமைந்த சொல்
(1) அன்போடு (2) எடுத்தாள் (3) அழுத (4) அணைத்து

**22.** வருபுகழ் என்பது
(1) வினைத்தொகை (2) பண்புத்தொகை (3) உவமைத்தொகை (4) உம்மைத்தொகை

**23.** பாடியவனுக்கு பரிசில் கொடுத்தான். - இங்கு பாடியவனுக்கு என்பது
(1) தொழிற்பெயர் (2) தன்மைப்பெயர்
(3) ஆகுபெயர் (4) வினையாலணையும் பெயர்

**24.** பாலோடு தேனை சேர்த்தால் சுவை கூடும். - இவ்வாக்கியத்தின் எழுவாய்
(1) பால் (2) தேன் (3) சுவை (4) பாலுந் தேனும்

[ பக். 3 ஐப் பார்க்க.

**25.** 'மக்காள் வாரீர்'. - இது

(1) எழுவாய் வேற்றுமை (2) விளி வேற்றுமை

(3) உடனிகழ்ச்சி வேற்றுமை (4) நீங்கல் வேற்றுமை

**26.** நான் ஒரு பாடகன் - மிருதங்கமும் வாசிப்பேன் - இவ்விரு வாக்கியங்களையும் இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்

(1) ஏனெனில் (2) எனவே (3) ஆகவே (4) எனினும்

**27.** அனுமன் "இங்கேயும் நான் சீதையைக் காணாவிட்டால் இலங்கையை அழித்து நானும் இறப்பேன்". என திடசங்கற்பம் கொண்டான். - இதில் இடம்பெற்றுள்ள தலைமை வாக்கியம்

(1) அனுமன் திடசங்கற்பம் கொண்டான்.

(2) நான் சீதையைக் காணாவிட்டால் இலங்கையை அழிப்பேன்.

(3) நானும் இறப்பேன்.

(4) நான் சீதையைக் காணாவிட்டால்; இலங்கையை அழித்து நானும் இறப்பேன்.

**28.** பின்வருவனவற்றுள் கூட்டுப் பெயருக்கு உதாரணம்

(1) தொழிலாளி (2) தோட்டக்காரன் (3) கட்டுரை (4) அறிவாளி

**29.** பின்வருவனவற்றில் இயல்பு புணர்ச்சியாக அமைவது

(1) மாங்கனி (2) கோயிற்புறா (3) வானவில் (4) ஒழுக்கமுடைமை

**30.** வரமாட்டேன் என்பதை பகுபத உறுப்புக்களாகப் பிரித்தால்

(1) வர + மாட்டேன் (2) வா + மாட்டு + ஏன் (3) வா + மாட்டேன் (4) வர + மாட்டு + ஏன்

- **பின்வரும் பந்திகளை வாசித்து அவற்றின் மையக் கருத்துக்களைத் தெரிவு செய்க.**

**31.** சிறுகதை என்பது இலக்கியத்தில் ஒரு பகுதி; இலக்கியத்தின் ஒரு வடிவம். இலக்கியம் என்பது ஒரு கலை. கலையைப் படைப்பது படைப்புத்திறன். படைப்புத்திறனை ஒருவன் இன்னொருவனுக்குக் கற்பிக்க முடியாது; ஒருவனிடமிருந்து இன்னொருவன் கற்றுக் கொள்ளவும் முடியாது. அப்படிக் கற்பிக்க முடியாமலும் கற்றுக்கொள்ள முடியாமலும் இருப்பதுதான் படைப்புத்திறன்.

(1) சிறுகதை என்பது ஒரு இலக்கிய வடிவம்.

(2) கலையைப் படைப்பது படைப்புத்திறன்.

(3) படைப்புத்திறனைக் கற்றுக் கொள்ள முடியாது.

(4) கற்பிக்க முடியாமலும் கற்றுக்கொள்ள முடியாமலும் இருப்பதுதான் படைப்புத்திறன்.

**32.** நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியாகச் சென்று புல்லுக்கும் பயன் கொடுக்கும். தொன்மையான இவ்வுலகில் நல்லார் ஒருவர் இருப்பாராயின் அவர் நிமித்தம் எல்லோருக்குமாக மழை பெய்யும்.

(1) நல்லவர் ஒருவரால் எல்லோரும் பயன் பெறுவர்.

(2) நெல்லுக்கு இறைக்கும் நீர் புல்லுக்கும் சேரும்.

(3) மழை எல்லோருக்கும் கிடைக்கின்றது.

(4) நல்லார் இருக்கும்போது நாட்டில் மழைபெய்யும்.

- **பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

**33.** அவன் உறங்கிக் கொண்டிருந்த அம்பலத்துக்கு வந்த சிலர் "பெரும்பசி எங்களை வருத்துகின்றது"

(1) என்றார். (2) என்றனர். (3) என்பர். (4) என்கின்றனர்.

**34.** நீ வகுப்பிற்கு ஒழுங்காக வந்து கற்றிருப்பாயானால்

(1) பரீட்சையில் சித்தியடைந்திருப்பாய். (2) பரீட்சையில் சித்தியடைவாய்.

(3) பரீட்சையில் சித்தியடைந்தாய். (4) பரீட்சையில் சித்தியடையலாம்.

**35.** மாணவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள்

(1) தரமானவையாக இருந்தன. (2) தரமானதாக இருந்தது.

(3) தரமானவையாக இருந்தது. (4) தரமானதாக இருந்தன.

[பக். 4 ஐப் பார்க்க.

- **பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழையற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க.**

**36.** (1) பாரதியாரின் வாக்கிற்கிணங்க தமிழ் மொழி சிரப்புற்று வளர்ந்தது.
(2) பாரதியாரின் வாக்கிற்கினங்க தமிழ் மொழி சிறப்புற்று வழர்ந்தது.
(3) பாரதியாரின் வாக்கிற்கிணங்க தமிழ் மொழி சிறப்புற்று வளந்தது.
(4) பாரதியாரின் வாக்கிற்கிணங்க தமிழ் மொழி சிறப்புற்று வளர்ந்தது.

- **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

**37.** பாராளுமன்றத்தில் அரசியல் அமைப்பின் பத்தொன்பதாவது ................................................ நிறைவேற்றப்பட்டது.
(1) உடன்படிக்கை (2) சுற்றுநிருபம் (3) திருத்தச்சட்டம் (4) வேட்புமனு

**38.** பாடசாலைக்கு வருகை தந்த பணிப்பாளர் ................................................ புத்தகத்தில் நிறைகளை எழுதிச் சென்றார்.
(1) பாடப்பதிவு (2) வரவு இடாப்பு (3) சம்பவத்திரட்டு (4) வர்த்தமானி

**39.** பாராளுமன்றத் தேர்தலில் ...................................................................... சுதந்திரமாகவும் தெளிவான மனநிலையுடனும் வாக்களித்தனர்.
(1) வாக்காளர்கள் (2) வேட்பாளர்கள் (3) உறுப்பினர்கள் (4) கண்காணிப்பாளர்கள்

- **கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக் கோப்பான பந்தி ஒன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

**40.** (அ) தென்மோடி என்பது பாடலுடன் ஆடப்படுவது.
(ஆ) இத்தென்மோடிக் கூத்து ஈழத்தில் மட்டக்களப்பில் மாத்திரமே தனக்கென சில அம்சங்களையுடையதாய் ஆடப்படுகின்றது.
(இ) தமிழ்நாட்டிலே தெற்கத்திப்பாங்கு, வடக்கத்திப்பாங்கு என இரு கூத்து வடிவங்களுள.
(ஈ) இதற்கென மக்கள் சூழ இருந்து பார்க்கும் வட்டமேடை அமைப்பு உண்டு.
(உ) அதுபோல ஈழத்திலும் வடமோடி, தென்மோடி என இரு பிரிவுகளுண்டு.

(1) இ, உ, அ, ஆ, ஈ
(2) அ, இ, உ, ஈ, ஆ
(3) அ, உ, ஈ, இ, ஆ
(4) இ, ஆ, உ, ஈ, அ

* *

# தமிழ் மொழியும் இலக்கியமும் II

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

---

**01.** சுருக்கமான விடை எழுதுக.

(i) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
"ஆவிபோ லாடையுமொன் றானதே"

(ii) 'இறை' என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.

(iii) பின்வரும் பேச்சுவழக்குத் தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றுக.
"அறுவத்தியோர் றாத்தல் இருக்குது கங்காணி"

(iv) குயில்பாட்டு பாரதியாரால் பாடப்பட்டது. இவ்வாக்கியத்தை செய்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

(v) பின்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளையிட்டு அதனை மீண்டும் எழுதுக.
நாயக்கர் காலத்தில் பள்ளு உலா கலம்பகம் போன்ற நூல்கள் தோன்றின

(vi) பொருளமைவுக்கேற்ப ஒழுங்குபடுத்தி எழுதுக.
மாலையை / வீமனுடைய / குலத்தில் / அழிவில்லாத / அணிந்த / மணம் / நான் / உதித்தவள் / வீசும்

(vii) பின்வருவனவற்றுள் வினையெச்சத் தொடர்களை இனங்காண்க.
சாலச்சிறந்தது, பாடிமகிழ்ந்தனர், படித்து முடித்தான், ஆடியமகன், ஓடுதல் நல்லது

(viii) கா எல்லாம் உயர்ந்த தாழை: கரையெலாம் கமழுந் தாழை. இதில் வந்துள்ள 'தாழை' என்ற சொல் விளக்கும் இருவேறு பொருளையும் தருக.

(ix) தற்சார்புக் கட்டுரைக்கும், சுயசரிதைக்கும் இடையிலான ஒற்றுமை, வேற்றுமை யாது?

(x) வில்லுப்பாட்டின் அமைப்பு ஒழுங்கின்றிக் காணப்படுகின்றது. அதனை ஒழுங்குபடுத்துக.

கதை ஆரம்பம், முடிவு, சபை வணக்கம், மங்களம் பாடுதல், கதை வளர்ச்சி, கடவுள் வாழ்த்து

**(2 x 10 = 20 புள்ளிகள்)**

**02.** பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்திற்குப் பொருத்தமான **தலையங்கம்** இடுக.

(அ) இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடு. பல மொழிகளைப் பேசும் மக்கள் இங்கு வாழ்கின்றனர். இவர்களிடையே வேறுபாடுகள் இருப்பினும் அனைவரும் ஒற்றுமையுடனும் புரிந்துணர்வுடனும் வாழ்ந்தாலே நாடு அபிவிருத்திப் பாதையில் முன்னேறிச் செல்ல முடியும் என்ற கருத்தினை வலியுறுத்தும் **விளக்கக்** கட்டுரை.

(ஆ) இன்று தொற்று நோய்களை விட தொற்றா நோய்களால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாயுள்ளது. தொற்றா நோய்கள் ஏற்படாமல் தடுக்க ஒருவர் தனது உணவுப் பழக்க வழக்கங்கள், நாளாந்த செயற்பாடுகள் என்பவற்றைச் சீரமைத்துக் கொள்ளல் அவசியமாகும். தொற்றா நோய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் உங்கள் பிரதேசத்தின் இளைஞர் மன்றக் கூட்டத்தில் நீங்கள் நிகழ்த்தும் **சொற்பொழிவு**.

(இ) சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். குறிப்பாக அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். சிறுவர் மீதான துஷ்பிரயோகங்கள் தவிர்க்கப்பட வேண்டும். சிறந்த உடல், உள மனவெழுச்சியுடன் கூடிய சிறுவர்களே சிறந்த குணநலப் பண்புகள் மிக்க நாளைய சமுதாயத்தைக் கட்டியெழுப்பக்கூடியவர்கள் என்னும் தொனிப் பொருளில் நண்பர்கள் இருவரிடையே இடம்பெறும் **உரையாடல்**.

(ஈ) குடும்ப வறுமை போக்கி பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் கற்பகம் வெளிநாடு சென்றாள். தான் கஷ்டப்பட்டு உழைத்த ஒரு பகுதியை வீட்டுக்கு அனுப்பி வந்தாள். இரண்டு வருடங்களின் பின் தான் உழைத்த பணத்துடன் வீடு திரும்புகின்றாள். தன் குடும்ப நிலையைக் கண்டு திகைத்து நிற்கின்றாள்...... இதனைக் கருப்பொருளாகக் கொண்ட ஒரு **சிறுகதை.**

**(25 புள்ளிகள்)**

The National e-learning Portal for The General Education

**03.** கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

அவரவர் கொள்கைக்கும் மனப்பக்குவத்துக்கும் ஏற்ப மக்கள் சமுதாயத்தோடு விதவிதமான இணக்கங்கள் கொள்கின்றனர். தன்னுடைய சுகவாழ்வில் கண்ணும் கருத்துமாய் இருப்பவனுக்கு உலகில் உள்ள நலமும் கேடும் தென்படுவதில்லை. தான் நாடுகின்ற இன்பம் ஒன்றிலேயே அவன் எண்ணம் வைத்தவனாய் இருக்கின்றான். அத்தகையவன் மக்களுள் கடைத்தரமானவன். அவன் விலங்குக்கு ஒப்பானவன். இனி, தரத்திலே அவனை விட மேலானவன் ஒருவன் இருக்கின்றான். உலகில் கேடுகள் பல இருக்கின்றன என்னும் உண்மையை அவன் அறிந்துகொள்கிறான். அக்கேடுகளிலிருந்து தான் தப்பிக்கொள்ளுவதற்கு உலகை அவன் துறந்து விடுகின்றான். தனியாய் இருந்து கொண்டு தனக்குத் தோன்றும் அமைதியான நல்வாழ்வை வாழ அவன் முயலுகிறான். அத்தகையவனைத் துறவியென்று அழைப்பது உலக வழக்கு. ஆனால் துறவிகளுள் அவன் கடையன் ஆகின்றான். ஏனென்றால் கேட்டுக்கு அஞ்சி அவன் உலகினின்று விலகியவன் ஆகிறான். இவனிலும் மிக்கானாக மற்றொருவன் இருக்கின்றான். அவனைச் சமூகச் சீர்திருத்தக்காரன் என்று சொல்ல வேண்டும். சமூகத்திலுள்ள சீர்கேடுகளையெல்லாம் அவன் தெளிவுபட அறிந்து கொள்கின்றான். அவைகளை விலக்குவது தன் கடமையென்று அவன் உணருகின்றான். கேடுகளைப் பற்றி மற்றவர்களுக்கு எடுத்து அவன் புகட்டுகின்றான். கேடுகளை அகற்றுவதற்கான வேலைத்திட்டங்களை நிர்மாணிக்கின்றான். பலரைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு சமூக சீர்திருத்தங்களை அவன் செய்ய ஆரம்பிக்கின்றான். தன்னையும் மறந்து மற்றவர்களுடைய நலத்திலேயே அவன் ஈடுபட்டிருப்பதால் அவனுடைய எண்ணத்தையும் செயலையும் சிறப்பித்துக் கூற நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்.

**(10 புள்ளிகள்)**

[ பக். 7 ஐப் பார்க்க.

**04**. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் **பூரணமான வாக்கியங்களில்** விடை எழுதுக.

**அழகின் சிரிப்பு**

சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள்
திருவிளக்கில் சிரிக்கின்றாள்; நாரெடுத்து
நறுமலரைத் தொடுப்பாளின் விரல் வளைவில்
நாடகத்தைச் செய்கின்றாள்; அடடே! செந்தோள்
புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும்
புது நடையில் பூரித்தாள்; விளைந்த நன்செய்
நிலத்தினிலே என் விழியை நிறுத்தினாள்; என்
நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்.

- பாரதிதாசன் -

(i) இப்பாடலில் கவிஞர் அழகை எவ்வாறு உருவகித்துக் காட்டியுள்ளார்?

(ii) "கலப்பையுடன் உழவன் செல்லும் புது நடையில் பூரித்தாள்" என்பதன் மூலம் கவிஞர் உழவனைப் பற்றிச் சொல்ல விழைவது யாது?

(iii) கவிஞர் எங்கெல்லாம் அழகினைக் காண்கின்றார்?

(iv) "நாரெடுத்து நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வளைவில் நாடகத்தைச் செய்கின்றாள்"
இப்பாடலடியின் கருத்தை உமது மொழி நடையில் எழுதுக.

(v) கவிஞரின் உணர்வு வெளிப்பாட்டை புலப்படுத்தி நிற்கும் பாடலடிகள் இரண்டினை எழுதுக.

**(2 x 5 = 10 புள்ளிகள்)**

**05**. க.பொ.த (சா.தர)ப் பரீட்சையில் சித்தியடைந்து, தகவல் தொழினுட்பக் கல்வியைப் பெறவிரும்பும் நீங்கள் அத்தகைய கற்கைநெறியை வழங்கும் நிறுவனம் ஒன்றிற்கு நீங்கள் பயில விரும்பும் கற்கைநெறி தொடர்பான விபரம், பயில வேண்டிய காலம், கட்டண விபரங்கள் என்பவற்றை அறிந்து கொள்ளும் விதத்தில் அந்நிறுவனத்தின் முகாமையாளருக்கு எழுதும் 100 சொற்களில் அமைந்த **கடிதம்.**

**அல்லது**

புதிதாக பால்மா ஒன்றினை உற்பத்தி செய்த நிறுவனம் ஒன்று, தனது உற்பத்தியை அறிமுகஞ் செய்வதையும் விற்பனையை அதிகரிப்பதையும் நோக்காகக் கொண்டு வெளியிட உத்தேசித்துள்ள **விளம்பரம்** ஒன்றை 100 சொற்களில் அமையுமாறு எழுதுக.

**(15 புள்ளிகள்)**

* * *

The National e-learning Portal for The General Education

# க.பொ.த. (சா. தர) உதவிக் கருத்தரங்கு - 2015

| | |
|---|---|
| **தமிழ் மொழியும் இலக்கியமும் III** | **இரண்டு மணித்தியாலங்கள்** |

**கவனிக்க**:

- அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- **1,2,3,4** ஆகிய வினாக்களுக்கும் **5,6,7** ஆம் வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

---

**01**. சுருக்கமான விடை எழுதுக.

(i) சொல்லுக சொல்லில் பயனுடைய; சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்.
இக்குறட்பாவைக் கொண்டுகூட்டி எழுதுக.

(ii) "தான் செய் குழிபின் தனக்கே..." என்ற முதுமொழி வெண்பா பாடலில் இடம்பெற்றுள்ள பழமொழிகளை தருக.

(iii) (அ) பெருவுடையார் ஆலயம்
(ஆ) கங்கை கொண்ட சோழீசர் கற்கோயில்
ஆகிய ஆலயங்களைக் கட்டியோரின் பெயர்களை முறையே தருக.

(iv) இராமச்சந்திர கவிராயர், பதுமனை நிந்திப்பதற்கான காரணம் யாது?

(v) "ஐயோ! இந்தக் குழந்தையின் மனதைக் கூட என்னால் திருப்தி செய்யக் கூடவில்லையே" என்று ஏங்கி நிற்பார்.
(அ) இங்கு ஏங்கி நிற்பவர் யார்?
(ஆ) ஏங்கி நிற்பதற்கான காரணம் யாது?

(vi) (அ) பரஸ்தானம்
(ஆ) க்ஷேமதண்டுலம்
ஆகிய சொற்களின் பொருளை எழுதுக.

(vii) "நீர் இப்படி வீண் பிடிவாதம் செய்வது உம்முடைய அகம்பாவத்தையே காட்டுகின்றது...." - இக்கூற்று
(அ) யாரால்
(ஆ) யாருக்கு
கூறப்பட்டது.

(viii) தர்மலிங்கம் தன்னுடன் சைக்கிளில் வந்து கொண்டிருந்த விமலனுக்கு செய்த அறிவுரை கதாசிரியரால் எதற்கு ஒப்பிடப்படுகின்றது?

(ix) "சுருள் அளகக் காட்டை மிதிக்கும் கயற்கண்ணியோ சுரம் கால் வைப்பதே" - இவ்வடிகளில் இடம்பெற்ற அணிகளை இனங்கண்டு எழுதுக.

(x) "மங்கையர்கண் புனல்பொழிய..." என்ற பாடலில் நந்திவர்மனின் சிறப்புக்களாகக் குறிப்பிடப்படுபவை எவை?

**(20 புள்ளிகள்)**

[ பக். 2 ஐப் பார்க்க.

**02.** பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புகளை விளக்கி எழுதுக.

(அ) வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது - நெட்டிருப்புப்
**பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்**
**வேருக்கு நெக்கு விடும்.**

(ஆ) ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக்
காணிய சென்று கதவடைத்தேன் - **நாணிப்**
**பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல**
**வருஞ்செல்லும் பேரு மென் நெஞ்சு!**

(இ) **பாரதியாரின் கவிநயத்தை ஒரு சிறு வியாசத்தினுள்ளே விளக்கிக் காட்டுதல் இயலாது.** இயற்கையிலுள்ள அழகையும், பசுமையையும், இனிமையையும் ஒருங்குதிரட்டிப் பாடலாக்கி நமக்கு அளித்திருக்கின்றார். முத்துச்சுடர் போன்ற வெண்ணிலாவும் பத்துப்பன்னிரண்டு தென்னை மரமும் கீற்றும் இளநீரும் காதில் விழுங்குயிலோசையும் பாட்டுக் கலந்திட ஒரு பத்தினிப் பெண்ணும் பராசக்தியின் காவலும் இருந்தால் இவ்வையகத்தையே தன்னுடைய பாட்டுத் திறமையாற் பாலித்திடக் கூடும் என்னும் பொருளை அமைத்துக் "காணி நிலம் வேண்டும்" என்றற்றொடக்கத்து ஒரு பாடல் எழுதியுள்ளார். "மனநிறைவு" என்னும் பொருள் பற்றிப் பிறமொழியாளரெழுதிய பாடலெதுவும் இதனுக்கிணையாகா.

(ஈ) இத்தகைய செல்வம் நிறைந்த பேதையர் நிலத்துக்குச் சுமையாகவும் உலகத்திற்கு உற்ற வசையாகவும் அமைந்திருத்தலால், அன்னார் அழிந்து ஒழிவதே நாட்டுக்கு நன்மை பயப்பதாகும். அறிவுடைய செல்வரை உலகம் போற்றும். அறிவற்ற செல்வரை உலகம் தூற்றும். அறிவுடைய செல்வனது ஆக்கம் கண்டும் உலகம் களிக்கும். அறிவிலாச் செல்வனது அழிவைக் கண்டு உலகம் மகிழும். **அறிவுடைய செல்வன் தன் பொருளைத் தக்கவாறு** பயன்படுத்தி **இம்மையிற் புகழும், மறுமையில் இன்பமும் எய்துவான்.** அறிவிலாச் செல்வன் பயன்பட வாழும் பண்பறியாப் பேதையனாய் இம்மையில் பழியும் மறுமையில் துன்பமும் எய்துவான்.

**(20 புள்ளிகள்)**

The National e-learning Portal for The General Education

**03.** **'கடற்புறம்'** என்னும் கவிதையில்....

(அ) "ஆழ்கடலில் ஆடுகின்ற தோணியிலே
தாழம் பூ வாசம்
தரைக்காற்று சுமந்துவரும்"
என்ற வரிகள் மூலம் கவிஞர் கூற விழைவது என்ன?

(ஆ) இக்கவிதையில் வரும் குடும்பத்து வறுமைநிலை எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?

(இ) இரவுப் பொழுதின் தன்மையும் பெண்ணின் மனநிலையும் இக்கவிதையில் எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளன?

**(15 புள்ளிகள்)**

**அல்லது**

**'நளவெண்பா'** என்னும் செய்யுட் பகுதியில்....

(அ) மின்னுந்தார் வீமன் தன்.....
கண்ணிமைத்தலாலடிகள்.....
என்ற பாடல்களில் தமயந்தியின் **வேண்டுதலும், மதிநுட்பமும்** சித்திரிக்கப்படுமாற்றை விளக்குக.

(அ) விண்ணரசரெல்லாரும் வெள்கி.....
திண்டோள் வயவேந்தர்......
என்ற பாடல்களில் தமயந்தி நளனுக்கு மாலை சூட்டியதும் **சுயம்வர மண்டபத்தில் இருந்தோரின் மனநிலை** சித்திரிக்கப்படுமாற்றை விளக்குக.

**(15 புள்ளிகள்)**

[ பக். 3 ஐப் பார்க்க.

**04.** **‘கல்வியே அழியாச் செல்வம்’** எனும் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) கல்வியையும் ஏனைய செல்வத்தையும் உருவகித்துக்காட்ட ஆசிரியர் எவ்வெப் பொருள்களை குறிப்பிட்டுள்ளார்?

(ஆ) இன்று ஆண், பெண் இருபாலாரில் எத்தகையோரைக் காண்பது அரிதாகப் போய்விட்டது என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்?

(இ) மண்ணுலக வாழ்க்கை இனிது நடப்பதற்கு கட்டுரையாசிரியர் கூறும் விளக்கம் என்ன?

**(15 புள்ளிகள்)**

**அல்லது**

**‘நக்ஷத்திரக் குழந்தைகள்’** என்ற சிறுகதையை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றிற்கு விடை தருக.

(அ) “நாம் சத்தியத்தையே பேசுவதால், நாம் ஒவ்வொரு தடவையும் ஒரு உண்மையைச் சொல்லும்போது ஒரு நக்ஷத்திரம் பிறக்கின்றது” இதனூடாக ஆசிரியர் உணர்த்த விரும்புவது யாது?

(ஆ) குழந்தை ரோகிணியின் குணப்பண்புகளை எழுதுக.

(இ) குழந்தை ரோகிணியின் மனதில் உண்டான துக்கத்துக்குக் காரணம் என்ன? **(15 புள்ளிகள்)**

- **5, 6, 7** ஆம் வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவு செய்து எழுதுக.

**05.** தனிப்பாடல்களில் ஒன்றான **“ஆழிவாய்ச் சத்தம் அடங்காதோ....”** என்ற பாடலில் வரும் **பெண்ணினதும்**

நந்திக் கலம்பகத்தில் உள்ள **“மண்ணெல்லாம் உய்ய....”** என்ற பாடலில் வரும் **பெண்ணினதும்** மனநிலைகள் சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**06.** **‘மங்கையர்க்கரசியின் காதல்’** என்னும் சிறுகதையில்

(அ) கருணாகரனின் சிறப்பை விளக்கிக்காட்டும் மங்கையர்க்கரசியின் வாய்மொழியாக வரும் கூற்றுக்களைக் குறிப்பிடுக.

(ஆ) உயிரற்றுக் கிடந்த கருணாகரனின் உடல் மீது விழும் மங்கையர்க்கரசியின் தோற்றம், தவிப்பு என்பன எவ்வாறு விளக்கிக்காட்டப்பட்டுள்ளன.

**(10 புள்ளிகள்)**

**07.** **“பார்வைகள்** என்னும் சிறுகதை தனிமனித உள்ளக் கிடக்கைகளை வெளிக்காட்டி நிற்கின்றது.” இக் கூற்றை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

* * *